ஸ்ரீ:
# ஞானவித்யா ப்ரகாசினி
இனிய தமிழ் மாதப் பத்திரிகை.

தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக்கண்டார் — பாரதி.

மலர் 1. | ஆகஸ்டு—1932. | இதழ் 11.

## திருக்குற்றாலம்.

### திருஞானசம்பந்தமூர்த்தி தேவாரம்.

வம்பார் குன்றம் நீடுயர்சாரல் வளர்வேங்கைக்
கொம்பார்சோலைக் கோலவண்டு யாழ்செய்குற்றாலம் ;
அம்பானெய்யோடாடல் அமர்ந்தான் அலர்கொன்றை
நம்பான்மேய நன்னகர் போலும் நமரங்காள் ! 1.

செல்வம்மல்கு செண்பகம் வேங்கை சென்றேறிக்
கொல்லைமுல்லை மெல்லரும்பீனும் குற்றாலம்
வில்லினொல்க மும்மதிலெய்து வினைபோக
நல்கு நம்பான் நன்னகர்போலும் நமரங்காள் ! 2.

பக்கம் வாழைப்பாய் கனியோடு பலவின்தேன்
கொக்கின் கோட்டுப் பைங்கனி தூங்கும் குற்றாலம் ;
அக்கும் பாம்பும் ஆமையும்பூண்டோ ரனலேந்தும்
நக்கன்மேய நன்னகர்போலும் நமரங்காள் ! 3.

மலையார் சாரல் மகவுடன்வந்த மடமந்தி
குலையார் வாழைத் தீங்கனி மாந்தும் குற்றாலம் ;
இலையார் சூலம் ஏந்தியகையான் எயிலெய்த
சிலையான்மேய நன்னகர்போலும் சிறுதொண்டீர் ! 4.

கைம்மாநீலக் கண்ணியர்சாரல் மணிவாரிக்
கொய்ம்மா ஏனல் உண்கிளியோப்பும் குற்றாலம் ;
கைம்மாவேழத் திருரிபோர்த்த கடவுள் எம்
பெம்மான் மேய நன்னகர்போலும் பெரியீர்காள் ! 5.

நீலநெய்தல் தண்சுனை சூழ்ந்த நீள்சோலைக்
கோலமஞ்ஞை பேடையொடாடும் குற்றாலம் ;
காலன் தன்னைக் காலால்காய்ந்த கடவுள் எம்
சூலபாணி நன்னகர்போலும் தொழுவீர்காள் ! 6.

போதும் பொன்னும் உந்தியருவி புடைசூழக்
கூதல்மாரி நுண்துளி தூங்கும் குற்றாலம் ;
மூதூரிலங்கை முட்டியகோனை மிறைசெய்த
நாதன்மேய நன்னகர்போலும் நமரங்காள் ! 7.

குறிப்பு:— சைவர்களின் அருள் நூலாகிய தேவாரத்தில் பண்சுமந்த பாடல்கள் பலவற்றைப் பார்க்கிறோம். இவற்றுள் சம்பந்தர் பாடல்கள் இணையில்லாதன என்று கருதப்படுகின்றன.

மேலே காட்டிய தேவாரம் திருக்குற்றாலப் பதிகத்தைச் சேர்ந்தது. இப்பாடல்கள் நவில்தொறும் நயம் கொழிக்கும் பாடல்கள் என்பதை வாசகர்கள் பாடிப்பாடி உணர்தல்வேண்டும்.

சம்பந்தர் இறைவனைப் பாடுவதோடு இயற்கை யழகுகளையும் வருணித்துப் பாடுவதுண்டு. இவர் இயற்கையழகுகளிலே இறையழகு கண்டார் என்று சொல்லலாம். இது சம்பந்தர் பாடல்களின் சிறப்பியல்பு. இவ்வியல்பு திருக்குற்றாலப் பதிகத்தில் விசேஷமாகக் காணப்படுகின்றது.

திருக்குற்றாலம் நமது திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள ஆரோக்கிய நிலையம். இது தென் இந்தியா எங்கும் புகழ்வீசுகிறது என்னலாம். இதிலுள்ள நீராடுதுறை மிக அழகானது; மலை

யருவிகளும் மிக அழகானவை. இங்கே இம்மை இன்பத்தோடு பேரின்பமும் கிடைக்குமென்பது மேலேகாட்டிய பாடல்களின் புதை பொருள்.

குற்றாலத்திலுள்ள மலையருவிகள் ஓர் சிற்றாறாகப் பெருகி வருகின்றன. இச்சிற்றாறு, தற்காலத்தில் தாமிரவருணி என்று அழைக்கப்பெறும் பிரசித்தப்பெற்ற பொருநை ஆற்றில் சங்கம மாகிறது. வடநூலார் இவ்வுபநதியைச் சித்திராநதி அல்லது சித் திரகங்கை என்று அழைக்கிறார்கள். வெள்ளம் வரும்போது சித் திராநதி மிக அழகாகயிருக்கும். அப்பொழுது இந்நதியின் தோற் றம், பார்வைக்குச் சிறுமையும் உண்மையில் விசேஷ மனப்பெரு மையுமுள்ள ஒரு மகாபுருஷனது தோற்றத்தை ஒத்திருக்கிறது என்று ஒரு கவிராயர் பாடியுள்ளார். சித்திராநதியின் இவ் விசேஷ லட்சணத்தை மேலேகாட்டிய தேவாரப்பாடல்களிலும் காணலாம்.

சம்பந்தர், தாம் ஆர்வத்தோடு பருகியனுபவித்த இயற்கைப் பொருட்காட்சி யின்பத்தையும், பக்தியின்பத்தையும், தமிழ் இன் பத்தையும், பாட்டின்பத்தையும், இசையின்பத்தையும் பஞ்சாமிர்த மாகக்கலந்து தந்தருளினார் என்று சைவர்கள் பெருமை கொள்ள லாம். இப்பாடல்களின் ஜீவவேகம் குற்றாலத்து அருவியை யும், இசையின்பம் அம்மலைக்காற்றையும், நினைப்பூட்டுகின்றன.

இப்பாடல்களைப் பாலைவனங்களில் பாடியபோதிலும், அங்கே பாலைவனம் மறைந்து குற்றாலம் வந்துவிடும்! பல நூற்றாண்டுகளுக்கு முன் சம்பந்தர் கண்டு எழுதிய சித்திரம் இன் றும் அழியாது நம்மனக்கண்ணுக்கு இலக்காகிறது. ஆத்ம எழுச்சி தரும் தேவாரப்பாடல்களில் இவை கௌரவஸ்தானம் பெறத் தக்கவை. பண்சுமந்த பைந்தமிழில் பெய்துவைத்த தேவாமிர்தம் என்று இத்தேவாரப்பதிகத்தைக் கூறலாம்.

# ராதாகிருஷ்ண

## அல்லது

## உ ண் மை க் க ட வு ள் .

'பெண்புத்தி பின்புத்தி' என்ற வசனம் இராதை விஷயத்தில் உண்மையாயது. ஏனென்றால் தன் மெய்யழகில் கர்வங்கொண்டு, கண்ணனும் தனக்கடிமை என எண்ணினாள் பேதை.

" துப்பிதழ் மடக்தையர் மயற்சண்டமாருதச்
சுழல்வந்து வந்தடிப்பச்
சோராத ஆசையாங் கான் ஆறு வான் நதி
சுரந்ததென மேலும் ஆர்ப்பக்
கைப்பரிசு காரார்போல் அறிவான வங்கமுங்
கைவிட்டு மதிமயங்கி..."

நில்லாதார் யாவரே! ஆனால் ஜெகன்மோஹன பாலகோபாலனும் மாயையிற்சிக்குவனோ என்று யோசித்தாளில்லை. ஸர்வஞ்ஞன கோபாலன் அவளுக்குப் புத்திபுகட்டவெண்ணினன். ஒருநாள் மெதுவாகத் தூண்டிலைப்போடவெண்ணி காரணமில்லாமல் 'குப்' பென்று சிரித்தான். இராதை அதைக் கவனித்துவிட்டாள். மனதில் விகாரம் குடிகொண்டிருந்ததனால் கிருஷ்ணனை அப்படிச் சிரித்ததின் காரணமென்னவென்று கேட்டாள். அதற்கு கிருஷ்ணன் "ஒன்றுமில்லை இராதா! உலகமெல்லாம் என் கைக்குள் இருக்கிறதல்லவா? அதனால் என்சக்தி எவ்வளவு என்று நினைக்கவே சிரிப்பு வந்துவிட்டது. அவ்வளவுதான்." என்றான்.

சில நிமிஷங்கள் சென்றன. இராதை திடீரென்று சிரித்தாள். கிருஷ்ணன் அவள் சிரித்ததின் காரணம் என்னவென்று கேட்டான். அப்பொழுது அவள் இறுமாப்புடன் "உலகமெல்லாம்

உம்சொற்படி நடக்கின்றது. ஆனால் நீர் என் சொற்படி நடக்கிறீர். இதை நினைக்கவே எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது." என்றாள்.

"யார்தான் உன் சொற்களுக்குச் சிரவணக்கஞ் செய்ய மாட்டார்கள்? உன் அழகைக்கண்டு மயக்குறுதவர்கள் யார்? அப்படி ஒருதரம் கண்ணை வெட்டினால் மூவுலகங்களும் உன் காலின்கீழ் வந்து கிடக்குமே!" என்றுசொல்லி அவளை இறுக தழுவினான்.

சின்னாட்கள் சென்றன. ஒருநாள் மாலை இராதை, தன் காதலனை, யமுனைக்கரையில் வந்து சந்திக்கும்படி செய்தி சொல்லி யனுப்பினாள். அன்று பூராவும் சாப்பிடக்கூட நேரமில்லாமல் தன்னை அலங்கரித்துக்கொண்டிருந்தாள். தலையை பேஷாகவாரி யெடுத்து பின்னல் போட்டுக்கொண்டு, இப்பொழுது 'பிச்சோடா' என்று சொல்லுகிறார்களே, அந்தக்கட்டும் போட்டுக்கொண்டு நிலைக்கண்ணாடியின்முன் நின்றாள். கண்ணாடி வெட்கி ஒளிமழுங்கிப்போனதுபோல் தோன்றியது. ஒரு கையில் பலநிறப் புஷ்பங்களால் செய்யப்பட்ட செண்டை எடுத்துக்கொண்டாள். மற்றொரு கையில் 'கண்ணன் தின்னும் பண்டங்' களையும் கனி வகைகளையும் எடுத்துக்கொண்டாள். யமுனைக்கரையை நோக்கிச் சென்றாள்.

சூரியன் மலைவாயில் விழுந்தருணம். பறவையினங்கள் கூடுகளில் வந்தடைந்து அன்று தாம்தாம் கண்டவிஷயங்களைக்குறித்துச் சம்பாஷித்துக்கொண்டிருந்தன. மான்பேடுகள் தத்தம் புருஷர்களை ஆவலுடன் எதிர்நோக்கிநின்றன. யமுனையோ, சிற்றோடைகளாகிய தோழியர் புடைசூழ, பல்லாயிரக்கணக்கான மரங்கள் நிழல்தந்து உடல் நோகாவண்ணம் மெல்லிய காற்றுவீச, வெண்மணற் பரப்புகளாகிய பட்டாடையணிந்து, கருமணல்களாகிய மைதீட்டிய கண்களுடனும், கருநாகம்போன்று நீண்டு செல்லும் நீர் போக்காகிய ஜடையுடனும் கம்பீரமாக விளங்கினாள்.

இராதை சென்ற பிரதேசமானது, யமுனைக்கரையில், இயற்கையன்னையின் இருதயமேபோலத்தூயது. இராதாகிருஷ்ணர்களின் பிரியத்திற்குப் பாத்திரமானது. இவைகளெல்லாம் அவ்விடத்திற்கு ஓர் அற்புத வசீகரத்தைத் தந்தன. ஆனால் எல்லோரையும் வசியப்படுத்துபவனான மாயக்கண்ணன் மட்டும் அங்கு

இல்லை. ஒருநாழிகை, இரண்டு நாழிகை, மூன்று, நான்கு...... இன்னும் கண்ணன் வரக்காணோம்! இதுவரை தேன் வண்டுபோல் உல்லாசமாயிருந்த இராதையின் மனம் சலிப்படைந்தது. எங்கு வாரமல் ஏமாற்றிவிடுவனோ என ஏங்கினாள். மறுவினாடியில் இறுமாப்பு ஓங்கி 'என்சொல்லையும் அலக்ஷியம் செய்வனோ?' என்று நினைத்தாள். பின்னும், வேண்டுமென்று எங்காவது ஒளிந்துகொண்டு விளையாடுகிறான் என்று எண்ணினாள். அதற்கேற்றாற்போல் 'சல' 'சல' வென்ற சப்தம் கேட்டது. "ஹே கண்ணா! மணிவண்ணா!! விளையாடவேண்டாம். ஓடிவாரும்!" என்று கூவினாள். ஒருவிதமான பதிலையும் காணோம்!

சிறிது நேரத்திற்கெல்லாம் சூரியன் அஸ்தமித்துவிட்டான். உயரே நீல நிறவான் சித்திரித்த கடல்போன்று சற்றும் சலனமின்றித் திகழ்ந்தது. இயற்கையே மௌனவிரதம் கொண்டாற் போல விளங்கியது. ஆனால் வெளியுலகத்தின் சாந்தியினால் இராதையின் மனக்கொந்தளிப்பு இருமடங்காகத் தோன்றியது. 'மதிமுகத்தோன், மதியுடன் வருவான்' என்று சமாதானம் செய்து கொண்டாள். சற்று நேரத்திற்கெல்லாம் சந்திரன் தனது பரிவாரங்களாகிய உடுக்கூட்டங்களுடன் தோன்றினான். தன்னுடன் தண்ணொளி மகிழும் கண்ணனைக் கூட்டிவாராது தன்னொளியெழுப்பி மகிழ்ந்தான். அவன் மகிழ்ச்சியவ்வளவும் இராதைக்கு இகழ்ச்சியாகத் தோன்றியது. கண்ணனைக்குறித்து, "இந்த இகழ்ச்சியை நான் ஒருக்காலும் மறக்கமாட்டேன். குளிரிலும் காற்றிலும் மதனவேட்கையால் நான் வாதைப்பட்டுக்கொண்டிருக்க, கண்ணன் எங்கேயோ உல்லாசமாக பொழுது போக்கிக் கொண்டிருக்கிறான் வரட்டும். யானைக்கொருகாலம் வந்தால் பூனைக்கொருகாலம் வருமல்லவா? அப்பொழுது கண்ணனை என் காலில் விழுந்து கெஞ்சி மன்னிப்புக் கேட்கும்படி நான் செய்யவில்லையானால் என் பெயர் இராதையல்ல." என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள். இந்தக் கோபாக்கினிக்காகிலும் கண்ணன் பயப்படுவான் என்று எண்ணினாள் போலும். ஆனால் சற்றிலும் கண்ணனின் வண்ணத்தையே காணவில்லை.

வீட்டிற்குத் திரும்பிவிடலாமாவென்று நினைத்தாள். ஆனால் அவள் மனதிற்குள் ஏதோவொன்று 'போகாதே,போகாதே' என்று தடுத்தது. நிச்சயமாய் அது கண்ணன் மேலுள்ள பிரேமையல்ல; ஏனென்றால் அப்பொழுதே அவனை வெறுத்துத் தள்ளிவிட்டாள். பின் ஏன் தாமதம்? படிப்படியாக அவளது கோபம்

துக்கமாக மாறியது. கையில் வைத்திருந்த பூச்செண்டு அவள் மன நிலையைப் பிரதிபலிப்பதுபோன்று வாடிக்கிடந்தது. கடைசியில் "நான் கண்ணனின் காதலியாகவிருப்பதற்கு சற்றும் தகுதியற்றவள். உலகத்திற்கே நாயகனான நாரணனை என் சொற்குட்பட்டு நடப்பவனென்று கொள்ளுதல் அறியாமையன்றோ? இப்பொழுதே என் தவறையுணர்ந்தேன். அவன் பாததூளிக்கும் சமானமாகாதவள், அவனை அடக்கியாளும் ஆற்றல் வாய்ந்தவள் என்று நான் நினைத்தேனல்லவா? அதுவன்றோ என் இப்பொ[illegible]தய நிலைமைக்குக் காரணம்? யானை தன் தலையிலேயே மண்ணை போட்டுக்கொள்வது போன்று என்கஷ்டத்தை நானே வருவித்து[illegible] கொண்டேன்" என்று உண்மையுணர்ந்து அந்தரங்கமாகத் த[illegible] தவற்றை நினைந்து உருகினாள். பக்திமேலிட்டு, தெய்வ தேஜஸ[illegible] முகத்தில் ஜ்வலிக்க கண்ணனைத் துதித்து, அவன் வரும் திசை நோக்கி நின்றாள். தட்சணமே, தன் சிரத்தையாரோ தொடுவது போன்று உணர்ச்சியுண்டாயது. கண்ணனின் குழலோசையும் தன் முதுகுப்பக்கம் கேட்டது. ஆனந்தம் மேலிட்டுத் திரும்பினாள். ஒன்றையும் காணவில்லை! பின்னும் திரும்பினாள். தலைமயிர் கற்றையைப்பிடித்து வலிப்பது போன்று தோன்றியது; திரும்பிப் பார்க்கவே, ஒருவரையுங் காணோம். மற்றொரு தடவை இதே சேஷ்டை செய்யப்படவே, சடக்கென்று திரும்பினாள். என்ன கண்டாள்? கண்ணன் கோபியர் புடைசூழ, தன் பக்கலில் நின்றும் ஆகாயத்தில் பறந்தான்! ஆயிரம் எண்ணங்கள் ஒரே சமயத்தில் இராதையின் சிறிய மனதில் புகுந்தன. சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த காட்சி மாறி கிருஷ்ணனின் தனியுருவம்மட்டும் காட்சிதந்து நின்றது. இதோ, அதோ எங்கும் கண்ணனின் உருவம் நிறைந்து நின்றது. இராதை தத்தளித்தாள். பொறுக்கமுடியவில்லை. வாய்விட்டலறினாள். "கமலக்கண்ணா! கோபிகாரமணா!! போதும், போதும். என்னை வருத்தியது போதும். இது போதும் ஜன்ம ஜன்மாந்திரத்திற்கும். ஐயோ! அறியாமற் செய்த பிழையை மன்னிக்கமாட்டாயோ? இராதாரமணா! கெஞ்சிக்கேட்டுக்கொள்ளுகிறேன். ஸர்வமும் நீயே, ஸமஸ்தமும் நீயே. நான் அற்பத்திலும் அற்பமானவள். உன்னை நான் ஆட்கொண்டதாக மனத்திற்கொண்டது முற்றிலும் மடமை, மடமை கண்ணா! சீக்கிரம் என்னை ஆட்கொள்ளமாட்டாயோ?" என்று கதறினாள்.

உடனே கண்ணனின் தெய்விகக் குழலின் இன்னிசை ஒலித்தது. பாம்பாட்டியின் குழலோசையால் கட்டுண்டு மயங்கிக் கிடக்கும் ஸர்ப்பம்போன்று, கண்ணனின் குழலோசையினால் மதி

மழுங்கி நின்றாள் இராதை. ஏதோ ஓர் சக்தியால் ஆகர்ஷிக்கப் பட்டு கண்ணனின் சமீபம் நெருங்கி நெருங்கிச் செல்வதுபோல் உணர்ந்தாள். கடைசியில் அவனுடன் ஒருமித்துவிட்டதுபோல் உணரவே, அபரிமிதமான இன்ப வெள்ளத்தில், அதுவரை அனுபவி யாத ஆனந்த வாரிதியில் மூழ்கி மூழ்கி எழுந்தாள். தான் வேறு கண் ணன் வேறு என்ற நினைவு முற்றிலும் ஒழிந்தது. கலப்பற்ற இன்ப உலகத்தின் கதவு அவளுக்குத் திறக்கப்பட்டது. சந்தோஷத்தின் மிகுதியால் பேச்சு மூச்சற்று நின்றாள். தன்னையே முற்றிலும் மறந் தாள். தன் வீட்டு வேலைகளை மறந்தாள்; சுகதுக்கத்தை மறந்தாள். அத்துடன் உலகத்தையே மறந்தாள். தன் காதலனைத்தவிர மற்ற வையெல்லாம் அவளுக்கு அஸ்தமித்துவிட்டன. இவ்வவஸ்தையில் எவ்வளவு நேரமிருந்தாள் என்பது அவளுக்குத் தெரியாது. ஏனென்றால் காலத்தைக் கடந்துவிட்டாளல்லவா? அவள் கண் விழிக்கும்பொழுது பிரபாதமாயிருந்தது.

அவள் பக்கத்தில் கிருஷ்ணன் துயின்றுகொண்டிருக்கிறான்-துயில்வதாகப் பாசாங்கு செய்கிறான். அவன்முகமானது யாதொரு கபடத்தோற்றமுமின்றி அன்றுபிறந்த குழந்தையின் முகம்போன்று புனிதமாக விளங்கியது. இராதை ஒருவிதமான மனத்தாங்கலு மின்றி கண்ணனை எழுப்பினாள். ஏனென்றால் அவன் உண்மை யாகத் தூங்கவில்லை யென்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். கண் ணன் கண்களைத் துடைத்துக்கொண்டு "ஆ! அதற்குள் பொழுது விடிந்துவிட்டதா?" என்று சொல்லிக்கொண்டே எழுந்தான். ஆனால் இராதை அவன் கைகளிரண்டையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டே "இனிமேல் என்னை ஏமாற்ற முடியாது. கையும் களவு மாய்ப் பிடித்தாய்விட்டது. முதலாவதாக நீர் ஓர் பெரிய பாசாங் குக்காரர் என்பதை ஒப்புக்கொள்ளும். விழித்துக்கொண்டிருக்கும் பொழுதே உறங்குவதாகப் பாவனை செய்கிறீர். நீர் ஸச்சிதானந்த ஸ்வரூபி. இரவு பகலென்ற காலவினையைக் கடந்தவர். அப்படி யிருக்க தூங்குவதாகவும் குறட்டைவிடுவதாகவும் பாவனை செய்வது வேஷமல்லவா?" என்றாள்.

கண்ணன்:— ஆம். நான் கபட நாடக வேஷதாரி யென் பது உண்மைதான். ஆனால் நான் அப்பேர்பட்டவன் என்ற உண் மையறிந்தவர்களுக்கு சுபாவமாகத்தான் தோன்றுவேன். என் உண்மை யறியாதவர்களுக்குத்தான் நான் வேஷதாரியாகத் தோன் றுகிறேன்.

இரா:— நீர் ஓர் பக்கா பொய்யர் என்பதை ஒப்புக்கொள்ளும். இல்லாவிட்டால்இந்தப்பொய்யானவுலகத்தைசிருஷ்டிப்பீரோ?

கண்:— ஆம் நான் பொய்யன்தான். ஆனால் முற்றிலுமல்ல. ஏனென்றால் நான் இதை ஒப்புக்கொள்வதில் உண்மைபேசுகிறேன். தவிரவும் என்னை அறிய விரும்புவோர்க்கு நான் உண்மையை ஒளிப்பதில்லை. பொய்யனைக்கண்டுவிட்டால் பொய் மறந்துவிடுமல்லவா?

இரா:— நீர் வஞ்சகம் செய்கிறீர். ஏனென்றால், நான் வேறு, நீர் வேறு என்ற பேத புத்தியை உண்டாக்கிவிடுகிறீர்.

கண்:— உண்மையே, ஆனால் தாங்களே பேதபுத்தியுடன் ஏமாந்து, பின்னும் ஏமாறத் தயாராகவிருக்கிறார்களே, அவர்களைத் தான் மோசம் செய்கிறேன்:

இரா:— நீர் பெரிய திருடன் எப்படி என்றால், மனிதர்களிடமிருந்து ஆத்மஞானத்தினால் ஏற்படக்கூடிய ஆனந்தத்தைக் திருடிக்கொண்டு, மாயையினால் அவர்கள் கண்களைக் கட்டிவிடுகிறீர்.

கண்:— நான் கள்வனல்ல,கள்வர்களுக்கெல்லாம் அரசன் அனாலும் ஆத்மாவை அஜாக்கிரதையாகவைத்திருப்பவர்களைத்தான் திருடுகிறேன்.

இரா:— நீர் இறக்கமற்றவர் ஏனென்றால் பிறர் கஷ்டப்படும்பொழுது நீர் சந்தோஷிக்கிறீர். நரிக்குக் கல்யாணம் நண்டுக்குப் பிராணவஸ்தையன்றோ?

கண்:— உண்மையே, அனால் என்னிடம் இரக்கங்காட்டாதவர்களிடமே இரக்கமற்றிருக்கிறேன். அதாவது ஆத்மார்த்தத்தைத் தேடாதவர்களிடம் இன்னும் நான் குரூரமாயிருக்கும்பொழுதும் இரக்கங்கொள்கிறேன். ஏனென்றால் துக்கத்திலும் ஒருவித மனச் சாந்தியிருக்கிறதல்லவா. தவிறவும் காலக்கிரமத்தில் எல்லோரையும் என்னுட் கொள்ளுகிறேன்.

இரா:— நீர் கெட்ட நடத்தையுள்ளவர் என்பதை ஒப்புக்கொள்ளும். ஏனென்றால் ஆற்றங்கரை மணலை எண்ணினாலும் எண்ணலாம், உம்முடைய பிரியைகளை எண்ணுவது முடியாது.

கண்:— நான் துன்மார்க்கன் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் உலகத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவும் என் குழந்தை ஆகையால் ஒவ்வொன்றினிடமும் எனக்கு விசேஷ உரிமையுண்டு. ஒருவரிடம் கொஞ்சுவேன், மற்றொருவரிடம் குலாவுவேன் வரவர் துயரங்களைப் போக்குவேன். அப்பொழுது அவர்கள் ன்னை எனக்காகவே நேசிப்பார்கள். அப்பொழுது நான் அவர்ளை ஸ்வீகரித்துக்கொள்வேன்.

இராதை பரம சந்தோஷமடைந்தாள். "நீர் பாசாங்குக்காரர், பொய்யர், வஞ்சகர், திருடர், இரக்கமற்றவர், துன்மார்க்கர் என்பவைகளைக் கேட்க மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஏனென்றால் நீர் நான், நான் நீர் அல்லவா?" என்றாள்.

ஆ! ஜார, சோர, சிகாமணியாகிய கண்ணன்பால் அளவற்ற அன்புபூண்டு ஒழுகிவர நாம் எவ்வளவு ஆசை கொள்கிறோம்!

## புதுவருஷ அறிவிப்பு.

1932-ம் வருஷம் அக்டோபர்-மீ 1-ந் தேதி முதல் வரும் நமது பத்திரிகைக்குப் புதுவருஷம் ஆரம்பமாகிறது. இவ்வருஷத்தைக்காட்டிலும் பன்மடங்குசிறப்புடன் புதியவருஷத்தில் பத்திரிகையை வெளியிட, வேண்டும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

பழைய சந்தா நேயர்கள், புதுவருஷச் சந்தாவைச் செலுத்துவதுடன், புதியசந்தாக்களையும் சேர்த்துக்கொடுத்து எம்மை ஊக்கப்படுத்துவீர்களென்று நம்புகிறோம்.

பத்திராதிபர்.

# பாம்பாட்டி.

(பி. ஸ்ரீ. ஆச்சார்யா.)

ஒருநாள் மாலைப்பொழுது நானும் என் நண்பன் அ
பாத்துரையும் மேல்நாட்டாரது 'ஸைகாலஜி' என்னும் மான
சாஸ்திர ஆராய்ச்சிகளைக் குறித்து உரையாடிக்கொண்டிருந்தோ
என் நண்பனுக்கு மானஸ மர்மங்களைக்குறித்து விசேஷ நம்பிக்கை
யில்லை. "ஸ்தூல விஷயங்களில் சிரத்தைகொள்ளாமல், மனத்தை
யும் ஆன்மாவையும் குறித்து விசாரித்துக்கொண்டிருந்ததினாலல்
லவா, நமது நாடு தற்சுதந்திரத்தை இழந்து தவிக்கிறது" என்று
அப்பாத்துரை சற்று ஆவேசத்தோடு கூறினான். அவனுக்கு
விடை கூறாமலே, எங்கள் வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்த
ஒரு பாம்பாட்டியைச சுட்டிக்காட்டினேன். அவன் மெலிந்து
நீண்ட உருவத்தோடு எலும்பும் தோலுமாகத் தோன்றினான்.
முகம். விகாரமாயிருந்தது. கண்கள் பாம்புக்கண்களைப்போல்,
ஊன்றி நோக்கியவர்களை நடுங்கச்செய்தன. குரல் இடிக்குரல்
போல் முழங்கியது. பேச்சு, சேர்க்கையில்லாமல் ஒன்றோ
டொன்று பொருத்தமில்லாத வார்த்தைகளால் இசைந்து பித்தர்
பேச்சைப்போல் இருந்தது. அவன் தெருவில் ஒவ்வொரு வீடா
கக் காத்திருந்து, ஒரு பைசாவாவது அல்லது அரிசியாவது
பெற்றுக்கொள்ளாமல் அவ்விடத்தைவிட்டுச் செல்வதில்லை.

பாம்பாட்டி எங்கள் வீட்டு வாசலில் வந்து தன்பாம்புப்
பெட்டியைக் கீழே வைத்துவிட்டு, ஊதுகுழலை எடுத்து வராளி
ராகத்தில் ஊதத்தொடங்கினான். சிறுவர் சிறுமியாதி கூட்டம்
வரவர அதிகரித்தது. நானும் என் நண்பனும் வீட்டுவாசலில்
உள்ள கட்டிலில் அமர்ந்தோம். பெட்டியை இலேசாகத் திறந்து
அதனுள் வாயினால் ஊதினான். பிறகு பெட்டியை முழுதும் திறந்
தான். உடனே சுருண்டுகிடந்த பாம்பொன்று படத்தை விரித்
துக்கொண்டு ஆடத்தொடங்கியது. அவன் ஊது குழலின் உதவி
யைக்கொண்டு ஆட்டத்திற்கு தக்கபடி ஊதிக்கொண்டிருந்தான்.
பாம்பு இசைக்குத் தக்கவாறு உற்சாகமாக ஆடலுற்றது. பிறகு
அலட்சியமாக அவன் அதனோடு விளையாடிக்கொண்டிருந்தான்.

"இப்பாம்பு ஒரு கொடிய விஷ சர்ப்பம்போல் தோன்றுகிறது" என்று நான் நண்பனை நோக்கிக் கூறினேன். நம்பிக்கையற்ற என் நண்பனே என் கூற்றை உடனே மறுத்தான். "விஷப் பல்லைப் பிடுங்கின பாம்புகளையே பாம்பாட்டிகள் கொண்டு வருகிறார்கள்", என்று சொல்லிவிட்டு அப்பாத்துரை பாம்பின் பக்கத்திலே சென்றான். அப்போது பாம்பாட்டி ஊதுகுழலைக் கீழே வைத்துவிட்டு, கூடையிலிருந்து பாம்பை வெளியே தரையில் ஆடவிட்டுப் பின்மாறு பாடத்தொடங்கினான்.

"நாதர்முடி மேலிருக்கும் நாகப்பாம்பே
... .... .... ....,"
"வணைபுகும் போதேதலை நீட்டும் பாம்பே
.... .... .... ...,"
"குற்றமற்ற சிவனுக்குக் குண்டலமானாய்
... .... ... ....,"
"மண்டலத்தைத் தாங்கமிக வல்லமைகொண்டாய்
.... .... ... .... ....,"

என்று இவ்வாறு பாடியபின், ஊது குழலை எடுத்து, இப்பாடல்களையேகேட்டோர் வியந்து மனமுருகும்வண்ணம் அக்குழலின் மூலமாகவும் பாடினான். பாம்புவெகு உற்சாகமாக ஆடிக்கொண்டிருந்தது.

பாம்பாட்டி பாடிக்கொண்டிருக்கும்பொழுது நண்பன் அப்பாத்துரை பளிச்சென்று மயங்கிக் கீழே சாய்ந்தான். உடனே அவன் கீழே விழுந்துவிடாதபடி பாம்பாட்டி அவனைத் தாங்கிப் பிடித்துக்கொண்டான். பிறகு நாங்கள் அப்பாத்துரையைக் கட்டிலில் படுக்கவைத்தோம். நண்பனுடைய மயக்கத்துக்குக் காரணம் இன்னதென்பது எனக்குப் புலப்படவில்லை. பாம்பின் கிட்டே நின்றுகொண்டிருந்தால் ஒருவேளை அவ்விஷப்பாம்பு தீண்டியிருக்குமோவென்று சந்தேகித்தேன். அப்படி ஒன்றுமில்லை என்று பாம்பாட்டி தைரியம் சொன்னான். பாம்பு கடித்த அடையாளமும் ஒன்றுமில்லை அப்பால்பாம்பாட்டி பின்வருமாறு பாடலுற்றான்.

"எட்டுநாகந்தனைக் கையாலெடுத் தாட்டுவோம்
... ... .... ... ..."
"ஆதிசேடனாகிலும் எம் அங்கையினாலே
.... ... .... ..."
"தூணைத் துரும்பாகத் தோன்றிடச் செய்வோம்
... .... ... ... ...."
"மூண்டெரியும் அக்கினிக்குள் மூழ்கிவருவோம்"
.... ... .... .... ..."

பாம்பாட்டி பாடிக்கொண்டிருக்கையில் என் நண்பன் கண்களை மூடிக்கொண்டே "ஆஹா! இவனல்லவா உண்மையான பாம்பாட்டிச் சித்தன்! அஷ்ட நாகங்களையும் பிடித்து ஆட்டிவைக்கிறான். தேவலோகம் என் கண்ணுக்குத்தெரிகிறது" என்று இவ்வாறு புலம்பினான். நண்பனது நிலை என் மனவருத்தத்திற்கும் சிறுவர் சிறுமியரது பெருஞ்சிரிப்பிற்கும் காரணமாயிற்று.

பாம்பாட்டி தன் பாம்பைப் பெட்டிக்குள் அடைத்துவிட்டு என் நண்பன் அருகே வந்து நின்று, "ஐயா, உறங்கிக்கொண்டிருக்கிறீரே! எனக்குப் பிச்சை கொடுத்து அனுப்புமையா," என்று உரக்கக் கூவினான். இறந்தவன் விழித்துக்கொண்டதுபோல் என் நண்பன் எழுந்திருந்தான். பிறகு அவன் என்னை நோக்கி, "நான் எவ்வாறு தூங்கிப்போனேன்? கண்டது கனவா, நினைவா? இந்தப் பாம்பாட்டி பல அற்புதங்களைச் செய்துகொண்டிருப்பதாகக் கண்டேன். மகா பயங்கரமான நாகங்களையெல்லாம் ஆட்டிவைப்பது போலவும், பொன்னுலகினை இம்மண்ணுலகிலேயே காட்டுவது போலவும், தூணைத் துரும்பாக்குவது போலவும் கனவுகண்டேன்," என்று வியப்போடும் சிறிதளவு வருத்தத்தோடும் சொன்னான். நான் பாம்பாட்டியின் மூட பக்தியையும், வேதாந்த ஞானத்தையும், மனோவசிய சக்தியையும் குறித்துப் பலவாறு சிந்தனை செய்துகொண்டே நான்கு அணா அவன் கையில் கொடுத்தேன்.

பாம்பாட்டி, பெட்டியோடு, சிறுவர் சிறுமியர் தொடரப் புறப்பட்டான். நான் அவனை மீண்டும் அழைத்து, "நீ வெறும் பாம்பாட்டிதானா? உனக்கு மேல் நாட்டாரது ஹிப்னடிஸ வித்தையும் தெரியுமா?" என்று கேட்டேன். அவன், "பாம்பாட்டியின் இரகசியம் பாம்பாட்டியோடே! உங்களுக்கு அதைக்குறித்து என்ன கவலை?" என்று பதில் சொன்னான்.

"உன் பாட்டிலே தாழ்ந்த புராணக்கொள்கைகளோடு உயர்ந்த வேதாந்த ஞானமும் காணப்படுவதேன்?" என்று மறுபடியும் வினவினேன். அவன் அதற்கு மறுமொழி கூறாமல், சித்தர் பாடல்களைப் பாடிக்கொண்டே சென்றான்.

அப்பால் என் நண்பன் மானஸ சாஸ்திரத்தைக் குறைகூறத் துணியவேயில்லை. ஆனால் என் மனத்தில் மாத்திரம் பொதுவாக மனநூல் ஆராய்ச்சியைக் குறித்தும் சிறப்பாகப் பாம்பாட்டிகளைக் குறித்தும் பலவகையான ஐயங்கள் தோன்றின.

---

# ஒழுக்கம்.

மாங்கை சா. கிருஷ்ணய்யர்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான்—ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்."

ன்ருர் நற்றமிழ்மறை யாசிரியர். உயிரே சிறந்த பொருள் எனி னும், மக்கட்குப் பல்வகைச் சிறப்பினேயும் தருதலால் ஒழுக்கம் அவ் வுயிரினும் சிறந்ததாம்.

"ஒழுக்கத்தால் சிறந்தோர் எக்குலத்தரேயாயினும் இழி குலத்தரே யாயினும் சீரியரேயாவர். உயிரினும் சிறந்த அவ்வொ ழுக்கம் விடுத்தோர் உயர் குலத்தரேயாயினும் யாவரேயாயினும் இழிதகையினரே யாவர். ஒழுக்கமானது சிறப்பின் பெரும் பொதி யாம்; பேரின்பப் பேருற்றும்; ஆதலின், அவ்வொழுக்கம் மக்கட்கு உயிரினும் சிறந்ததாம்." (விநாயக—புராணம்)

ஒருவனது நடக்கை நன்னடக்கையாயின் அவனே நானிலம் புகழும்; நன்மையெலாம் வலுவில்வந்தடையும்; நீள் விசும்பும் பிறரும் கொண்டாடுவர்; நிமலனது அருளும்சேரும்; நல்வீடும் வரவேற்கும். அல்லாமல், தீநடக்கையாயின் அவனே தாணியோர் காரியுமிழ்வர்; விண்ணவரும் வெறுப்பர்; விமலனருளும் விலக்கும்; எரிவாய் நர கிடைக் கிடந்துழல்வோர் தம்முடன் கூடியிருக்க வருந்தியழைத்திடு வர். ஆகலான், நல்லொழுக்கம் நாளும் நன்மையே பயந்திடும். தீயொழுக்கம் தீராத்தின்மையே தந்திடுமெனப் பெறப்படுகின்ற தன்றோ?

அவ்வாருய நல்லொழுக்கம் எது எது (?) தீயொழுக்கம் எது எது(?) என்பதாய் அற நூல்கள் பலவற்றினும் 'அங்கை நெல்லிக் கனி' யென நன்கு தெளிவுற விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றது.

அவ்வறவழி யாதெனக் கண்டறிந்து கொள்ளுதற்கான அறிவினை யும் ஐயன் மனமுவந்து நமக்கு அளித்துள்ளான். ஆன்ற உல கிடை வாழும் மற்றெப்பிறவியும் பெற்றில்லா அவ்வறிவே ஆறும் அறிவாம் பேரறிவாம் பகுத்தறிவெனப்படும்.

பாலுக்குள்ள சுவை நீருக்கில்லையன்றோ? பாலுடன் கலந் துள்ள நீரைப் பிரித்தெடுத்துப் பாலை மட்டில் பருகும் அன்னப்பற வையானது புள்ளினங்களுள் மிகச்சிறப்பினையுடையதாய் எண் ணப்படுவதே போலே, நன்மை பயந்திடவல்ல நல்லொழுக்கம்யாது? நலம் பயவாத் தீ யொழுக்கம் யாது? எனக் கண்டறிந்து, பார்த் தற் கு நல்வழியே போன்றதாய், நல்வழியுடன் கலந்துள்ள தீ வழி யினை விட்டொதுக்கித் தள்ளி, நல்வழி விலகாதிருப்பவனையே நன்கு சிறப்பித்துக்கூறும் உலகம்.

அறநூல் பலவற்றினையும் ஆராய்ந்து, அவற்றினுள் பொதிந்து கிடக்கும் அரும் பொருளாம் உட்பொருளை அறிந்தோர்க் கே அறவழி யாதென விளங்கப்பெறும்; ஆயின், அனைத்து அற நூல்களையும் கற்றுணர்தற்கானதிறம் மக்கள் யாவரும் பெற்றிருத்த லென்பது எவ்வாறு கூடும்? பாழும் வயிற்றுப் பாட்டைப் பார்த் தற்கே பொழுது போதாதிருக்கும் பலர், பன்னூல்களையும் படித் துணர்தல் என்பது எவ்வாறாகும்? எனின், அத்திறம் கைவரப்பெற்ற ஆன்றோர் அடிச்சுவட்டினைப் பின்பற்றி நிற்கையேயாம். ஒழுக்கத் தாற் சிறந்தோரே உயர்ந்தோர் ஆவர் அன்றோ?

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."

எனத் தண்டமிழ்மறை தெளிவுறக்கூறும். உயர்ந்தாரோடு பொருந்த நடக்கலைக் கல்லாதார், பன்னூல் பொருளுணர்ந்த பெரும் புலவரே யாயினும், கற்றறிமூடரேயாவார். உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே யாகலான், உயர்ந்தார் நடக்கை யாவும் நன்னடக்கையே யாம். அந்நடக்கையினைப் பின்பற்றி நடக்கையே அறிவினுக்கழ காம்.

ஒழுக்கத்தாற் சிறந்த உயர்ந்தாரே போன்ற தோற்றத்தை மட்டில் பெற்றவராயிருக்கின்றனர் ஒரு சிலர்; அன்னாரது உள் நடவடிக்கையினைப் புகுந்து பார்க்கிலோ மிக்க இழிதகையினவாயிருக்கும். அன்னோர் தம் பாழும் வயிற்றுப் பாட்டிற்கெனவே, பசுத்தோல் போர்த்த புலியெனப் பகல் வேடம் பூணுகின்றனர். அம் மாபெரும் மூடரின் உட்புரையினையறியப் பெறாது, அன்னோருடன் கூடி அளவளாவியிருந்து, அகத் தூய்மையிலா அன்னோருரைக்கும் அறவுரையினைச் செவி மடுத்தின்புறும் மூடரும் ஒக்க நரகிடை வீழ்வர் என,

"நற்றவ வேடம்கொண்டு அறம்உரைத்து
நானிலத்(து) உணவதின் பொருட்டால்
பற்றறும் அவர்கள் போலவேநடித்துப்
பற்றவா வொடும் பிறர்கடையின்
முற்றவே உழலு(ம்) மூடரும்அவரை
அடைந்திடும் மூடரும் ஒக்கச்
சுற்றியே பாசப்பவக் கடல்பட்டுக்
கறங்(கு)எனச் சுழல்வர் வீ(டு)இலரே"

என்பதாய்ச் சிவ-தத்துவ தரிசனம் கூறும். ஆதலான், நற்றவ வேடத்தான் மட்டில் ஒருவர் நல்லோராகார். அஃதிலையே யாயினும் நன்னடக்கை மட்டில் இருக்குமேல் அவரே நல்லோரெனப்படு-வர்

ஒருவரது நடக்கையே நல்லோர் தீயோர் என்பதாய் நன்கு விளக்கிக் காட்டிவிடும். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்." என்னும் பழமொழி ஆழ்ந்த அநுபவத்தின் பயனால் எழுந்த நன்மொழியேயாமல்லவோ? அவ்வகையான் கண்டறிந்த நல்லோர் எத்தன்மைய நடவடிக்கையினைக் கைக் கொள்ளுகின்றனரோ அந் நடவடிக்கையே நன்னடவடிக்கையாம். அன்னோர் அடிச்சுவட்டினைப் பின்பற்றலே அறிவினுக்கழகாம்.

# 2; பெரியாழ்வார் பிரபந்தம்.

(முன் 438-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

102 இமைக்கிலர் விழிகள்வாயா லிசைத்திலர் துதிகணின்ற
தமைச்சில கடிகைப்போது முணர்ந்திலர் தரணிதாங்குங்
கமைப்பெரு முலகின்மேற் சென்ற கருத்தினைத் திருத்திவா

லமைத்தொடர்ந் தெடுத்தாட்கொள் வீரன் செய்கேன்
கைம்மாறென்றா

103 அவணநின் றாழ்வார் கூற வண்டமுண் டண்டத் துள்ளே
யுவணம தேறி வீதி யுலாவுவா ரிசைப்பா ரந்தோ
விவணமோ ரன்பா னோக்கி லிகபாத் திலதென் றெண்ணி
மவணமற் றவரே சென்றவ் வாதினை வெல்வீ ரென்றார்.

104 என்றிறை யருளிச் செய்ய விருகணீ ரருவி சோர
நின்றவ ரிருந்தார் தம்மை நீணிலத் திறைஞ்சி வாழ்த்தி
சென்றனர் வீதியூடே தென்னவன் செயலே தென்னிற்
குன்றென வுயர்ந்த நீதிக் கோமனை வாயிலெய்தி.

வேறு.

105 வாசம லர்த்திரு மங்கையும் வாணியும் வீரம டந்தையும்
நேசமு டன்புவி மங்கையு நேர்பெற நேமி தரித்தவன்
றேசுடை வானவர் கோனெனச் செல்வமி குந்துசி றந்தசிங்
காசன மீதிலி ருந்தன னண்டரும் விண்ணி னெருங்கினர்.

106 நன்றித ருஞ்செல்வ நம்பியு நான்மறை யாளரு மன்பருஞ்
சென்றுயர் தென்னனி ருந்ததோர் சீரிய வாசன மாடுற
வன்றரு ளெய்தவி ருந்தன ராசறு மன்னர மைச்சரு
நின்றனர் முத்திவி ரும்பினோர் நேர்பெற வந்து நிரைத்தனர்.

107 போக்குமி குத்துழல் புத்தரும் போதம கன்றவை சேடரு
நக்கனை நம்பிய சைவரு நன்றிகொள் சாங்கிய யோகருந்
தொக்குல காயத வீணருந் துன்புறு மாவிர தத்தரு
மெக்கரு மத்தினு மையுற வேயுறு மாற்கரு மெய்தினார்.

108 மாயைத ரும்பெரு வாதரும் வஞ்சம்வி டாவரு கோர்களா
மாய்வறு வாமியர் கூட்டமு மாதிய வாதிய ரெய்தினா
ரேயுறு மவ்வவை யின்கணே யேழுலகுண்டவர் தொண்டராய்த்
தூயது யத்தைவி ளக்கிய சுந்தர வந்தணர் தோன்றினார்.

109 தோன்றிய வன்பரை நோக்கினன் றோமறு வார்செல்வ நம்பியு
மூன்றுல குண்டவர் தொண்டனா ரெய்தின ரென்றுமொ ழிந்திட
வூன்றுமெய் யன்பின்மன் னோக்கின னுத்தம னார்வண மாய
னாய்த்
தோன்றினர் தென்னவன் கண்கனோர் துண்ணென வோடி
யெழுந்தனன்.

வேறு.

110 எழுந்திருந்த விறற்றென்னன் செல்வநம்பி யுடனேகிச்
செழுந்தவனை யடிவணங்கிச் சீரியநான் மறைக்குமொரு
கொழுந்தென்னத் திருவுருவங் கொண்டபெரி யாழ்வாரும்
விழுந்திறைஞ்சு மன்பர்களை விரைந்தெடுத்தார் சீர்வதிப்ப.

111 கொடியகொடு வினைக்கீடாய்க் கூற்றுவன்கைப் பட்டுழலு
மடியனேற் கருணல்கி யாள்வந்த திருவுருவோ
படிமீதின் மாமாயை பாறவந்த பரஞ்சோதி
வடிவிதுவோ வெனமன்னன் மகிழ்ந்துரைத்தாங் குடன்
கொடுபோய்.

112 சீரியசிங் காசனத்திற் றேவவினி திருத்தியென்று
னேரியனான் மறைவல்லா ரெழிலரியா சனத்திருந்தார்
கூரியமெய் யறிவில்லா வாதியர்கள் குழாத்திடையிற்
றேரிலுறு மிரவியெனச் சென்றவர்தே வர்கள்கண்டார்.

113 வாசவனா மதுகண்டு மற்றிவனாற் றென்னவனம்
ஈசனடி யறிந்தடைவ னிவையுலைக்க வேண்டுமெனத்
தேசுபொலி சுரர்குருவைச் சென்றுசிங்கா சனத்திருந்த
மாசிலான் றனைவெல்க மானுடனா யெனவிட்டான்.

114 இந்திரன்சொற் பணியாலே யிருநிலத்தில் வியாழகுரு
வந்துமா னிடவடிவாய் மன்னவன்முன் றோன்றினா
னெந்தநா டெவ்வூர்நீர் யாவரதை யியம்புமெனச்
சந்திரன்சீர்க் குலத்துதித்த தார்வேந்தன் மகிழ்ந்துரைப்ப.

115 பொன்னுலகாள் பவன்சூதாற் போந்தவர்சென் றங்கிருந்து
மன்னவநீ கிழிகட்டி வாதிடைநின் றவர்கொண்மி
னென்னவுரைத் தனைபார்ப்பா னேதுசெயித் தவன்றுளிற்
றென்னவிழுந் தனையாதைச் செப்புதிநா னெனைச்செப்ப.

116 என்றுரைத்த வவ்வேலை யிருந்தசமயத்தவர்க
ளொன்றுபட வியாழகுரு வுடன்கூடி முடிவேந்தை
யின்றெமது முன்னாக விருநிலத்தி விறைஞ்சுவித்த
நன்றிதரும் வேதியரே கிழியறுக்க நாமுமென.

117 சன்னைசொல்லி யவன்பதத்திற் றாழ்ந்தமன்னை மிகவிகழத்
தென்னவனு மருகிருந்த செல்வநம்பி முகநோக்கி
யென்னையினிச் செய்வதென வியம்பியிடு மளவையினின்
மன்னவமற் றிவரவரை வெல்வர்வருந் தேலென்றான்.

118 எனவியந்து செல்வநம்பி யுறைப்பவிற வியல்வேந்தன்
மனமகிழ்ந்தாங் கினிதிருந்தான் வானவர்கோன் விடுத்தவனு
மனவயல்சூழ் புதுவைநக ரச்சுதனார் விடுத்தவரும்
வினவரிய பாசமைய தர்க்கத்தின் மிகமூண்டார்.

119 பரத்துவமே தறைந்துகிழி பற்றுமென்றான் வியாழமுனி
விரத்திநெறி நின்றவரும் விண்டுவென்றா ரண்டர்குரு
வுரத்துமல ரயனென்றா னோதவண்ணர் தொண்டரவன்
சிரத்தையான் கைகொடுத்த திறமறந்தா யோவென்றார்.

120 நன்றவ்வா றானாலு நாரணனன் றேபரமன்
கொன்றைமுடி வைத்தகுண வெற்பரொன்றே கூறுதுநா
னென்றனன்வா னவர்குரவ னேழுலகு முண்டவரை
பொன்றிபசீர் மனத்துள்வைத்த வுத்தமனார் நகைத்துரைப்பார்.

121 அறிவிலாய் முன்புகன்ற வயன்சிரத்தை யறுத்துரைத்த
மறியமருங் கரத்தனார் மற்றவினை போக்கியிடு
நெறியறியார் பலியிரந்து நெடுங்காலந் துயரமுற
வெறியார்பூந் துழாய்முடியெம் விண்டுவன்றோ வதுதவிர்த்
தான்.

122 இவ்வண்ண மிவர்கூற விமையவர்தங் குருவுரைக்கு
மெய்வண்ண முடைக்கால கற்பிதத்தில் விட்டதெனப்
பொய்வண்ணக் காலத்தைப் பரமென்றான் போக்கற்றான்
மைவண்ணப் பரஞ்சோதி தொண்டரிவை மறுத்துரைப்பார்.

123 காலமொரு மூன்றுமுடைக் கடவுளாரார் கருத்தினிடை
மூலமுடி வறியாதாய் மொழிகவென வவன்மொழிவான்
ஞாலமிசை யிருணீக்கி நற்பொருளை விளக்குவிக்குங்
கோலவெழிற் கதிரொளியை யவன்பரமா மெனக்கொண்டே.

124 உரைத்தனனவ் வுரைகேட்ட வுத்தமனார் முறுவல்செய்து
வரைத்தடந்தோள் விறன்மன்னன் மாமுகத்தை நோக்கியிவன்
றிரைக்கடலுட் டினம்பிறந்துஞ் செத்துழல் கின்றவனை
யிரைக்குமறை காணாத பரமென்று விசைந்திடுமோ.

125 சொல்லாயென் றனாழ்வார் தொல்லுலகங் காத்தளிக்கு
மல்லார்திண் புயத்தென்னன் மதிகெட்டா ரெனவுரைத்தான்
கல்லாத சுரர்குருவுங் கட்டுரையற் றுங்கிருப்ப
வெல்லாருந் தங்கடங்க டெய்வமெழிற் பரமென்றார்.

126 அதுகேட்ட செல்வநம்பி யாழ்வார்த முகநோக்கி
யிதுவேனிப் புல்லருட னெம்பெருமான் விளையாடன்
முதுவேத முதற்பொருளை மொழிந்துவெளி யிடுகவென
வதுவேநங் கருமமென வாழ்வாராங் கெதிர்ந்தவரில்.

127 சைவர்களாங் கரித்திரட்கோர் சாற்றுசிங்க வேறானார்
பொய்யுடைய வாமிகளாம் புலையிருட்கா தவனானை
யையமுறு புத்தர்களா மாட்டினத்துப் புலிபானார்
மையலரு கப்பஞ்சின் மாகனலா னார்பிறராம்.

128 சற்பங்க டனைமாய்க்குங் கருடனெனத் தான்சமைந்தார்
நிற்பனசெல் வனவிரங்க நேமியான் றிருத்தொண்ட
ரற்புதமென் றமார்குழா மிறைஞ்சவா ரணத்தந்தச்
சிற்பரத்தை யுலகுய்யத் தென்னவன்முன் கட்டுரைத்தார்.

129 கட்டுரையைக் கேட்டுமண்ணோர் கனன்மெழுகாய்க் கரைந்திட-
விண்
டொட்டுயர்ந்த மண்டபத்திற் றாக்கியசீர்க் கிழிதாழ
வெட்டெழுத்துக் குறைவிடமா மாழ்வார்த மிருதாளிற்
பட்ட கிழிதனையறுத்துப் பாண்டியன்முன் பரிந்திட்டார்.

(தொடரும்.)

# சரசாவின் சமர்த்து.

[குருகூர் தாஸன்.]

பார்ப்பவர் மனத்தை மயக்கும்படியான அழகுவாய்ந்தது பத்மவிலாசம் பங்களா. அதன் வராண்டாவில் அழகே உருவாய் தோன்றும் ஆரணங்கு ஒருத்தி துயரப்பெருக்கினால் செயற்கை வனப்பின்றி மிகுந்த சோகத்துடன் ஒரு சோபாவின்மீது சாய்ந் கொண்டிருந்தாள். பெரும் புயற்காற்றுச் சமயத்தில், கடலின்நடுவே அகப்பட்ட சிறு மரக்கலம் எவ்வாறு அக்கடலின் அலைகள் உயரும் போது அத்துடன் எழும்பியும், தாழும்போது அத்துடன் தாழ்ந்து கொண்டிருக்குமோ அதுபோல துன்பத்தின் மிகுதியால் அடிக்கடி அம்மின்னாளினுடைய பெருத்த ஸ்தனபாரங்கள் விம்மி விம்மி தாழ்ந்து கொண்டிருந்தது. அடிக்கடி பெருமூச்சும் விட்டுக்கொண்டிருந்தாள். தனது துன்பத்தின் பெருக்கினால் பக்கத்தில் மேசை மீது வைத்திருக்கும் காபி ஆறியதையும் அறிந்திலள். அவளது மனம் தன்வசமின்றித் தத்தளித்துக்கொண்டிருந்தது. கடலினும் பெரிய கண்கள் இரண்டும் மிகுந்த கலக்கத்துடனும் ஆவலுடனும் அடிக்கடி வாயிற்பக்கமுள்ள கேட்டை (Gate) நோக்குவதும், கையிலுள்ள ரிஸ்டுவாச்சை நோக்குவதையும் பார்த்தால் அவள் யாருடைய வரவையோ மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாகப் புலப்படும். மணி ஆக ஆக கதிரவன் மறையமறைய இவளுக்கு இருக்கைகொள்ளவேயில்லை. தான் உட்கார்ந்திருந்த சோபாவைவிட்டு எழுந்து அங்குமிங்கும் உலாத்தியவாறு இருந்தாள். இதுகாறும் அவளது காலடியிலேயே படுத்தவாறு அவளுடைய துன்பம் ததும்பிய முகத்தைப் பார்த்தவண்ணமிருந்த அவளுடைய நாய்க்குட்டியானது எழுந்து தன் எஜமானியின் துன்பத்தை விலக்க முயற்சிப்பதுபோல அவளது காலைச் சுற்றி சுற்றி ஓடிவந்து பலவிதமாக விளையாடிற்று. அம்மங்கை நல்லாளோ அதை ஒரு சிறிதும் சட்டை பண்ணவில்லை.

மணியும் 7 ஆகியது. காந்தவிளக்குகள் எங்கு பார்த்தாலும் வெளிச்சத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தன. சுற்றிலுமுள்ள பூஞ்செடிகளின் நறுமணம் தென்றலுடன்கலந்து கம் என்ற வாஸனையை வீசிக்கொண்டிருந்தது. இளநிலவும் புன்சிரிப்புடன் சிறிது சிறிதாக கீழ்திசைக் கடலினின்றும் வெளிவந்துகொண்டிருந்தது. இவளின் துன்பத்தைக்கண்டோ அல்லது இவளுடையமுகத்தின் முன்பு

வர வெட்கியோ யாதோ அறியோம். அவனும் அடிக்கடி சிறு சிறு மேகங்களின் ஊடே மறைந்து மறைந்து வந்துகொண்டிருந்தான். இந்த இயற்கை இன்பத்தில் ஒருவிதமான பிரியமுமின்றி முற்றும் துறந்த ஞானிபோன்று தனது மனதை வேறு வேறு சிந்தனையில் செலுத்தியவளாகயிருந்தாள் நமது மங்கை.

சுமார் 7—30 மணிக்கு மிகுந்த வேகத்துடன் ஓர் மோட்டார் அப்பங்களாவின் கேட்டிற்குள்ளாகவந்து நேரே வராண்டாவின் ஓரமாய் வந்தது அதுவந்து நிற்பதற்கு முன்பாக நமது மங்கை ஒரே பாய்ச்சலாக ஓடி வாயிற்படியின் அருகேவந்து அதினின்றும் இறங்கிய ஓர் கனவானை வரவேற்றுள். பின்பு இருவரும் உள்ளே ஹாலிற்குச் சென்று அங்குள்ள இரு ஆசனங்களில் அமர்ந்தனர். உடனே இரு வெள்ளித்தட்டுகளில் சிற்றுண்டியும் காப்பியும்கொண்டுவந்து வைக்கப்பெற்றது. கனவான் மிகுந்த களைப்புடன் இருந்தபடியால் ஆவலுடன் புசித்தார். நமது மங்கையும் சிறிது சாப்பிட்டுக்கொண்டே கனவானைப் பார்த்து அண்ணு! விஷயம் எப்படியிருக்கிறது. நம்பிக்கைக்கு ஏதேனும் வழியிருக்கிறதா என்றுள்.

கானவான்:— ஸரஸா! நான் என்ன சொல்வது. கேஸோ மிகவும் கடினமானது. சந்தர்ப்ப சாக்ஷியங்களோ நமக்கு நேர் விரோதமாயிருக்கிறது. இதில் உன் கணவன் தப்புவது தெய்வாதீனம்தான். மனுஷயத்தினத்தினுல் முடியாதது.

ஸரஸா:— அண்ணு! அப்படியாயின் வேறு வழியில்லை. அவர் முடிவு இவ்வளவுதான. ஹா! தெய்வமே என மூர்ச்சையாகி விழுந்துவிட்டாள். உடனே சுரேந்திரநாத்பானர்ஜி என்னும் பிரபல பாரிஸ்டர் பரபரப்புடன் எழுந்து தனது தங்கையை எடுத்து பக்கத்திலிருந்த ஓர் சோபாவின்மீது கிடத்தி நல்ல ஜலத்தினுல் முகத்தைத் துடைத்து சிறு விசிறியினுல் மெல்லெனவிசு அம்மங்கை தனது கண்களை சிறிது திறந்து பார்த்து ஜலம் வேண்டுமென சைகை செய்தாள். உடனே பானர்ஜி பக்கத்திலிருந்த கண்ணுடிடம்ளரில் சிறிது ஷர்ப்பத்தை ஊற்றிகொடுத்தார். அதைக் குடித்ததும் ஸரஸா எழுந்து உட்கார்ந்தாள்.

சுரேந்திரன்:— ஸரஸா படித்த பெண்ணுகிய நீ இப்படி பயப்படலாமா சிறிது தைரியமாயிருக்கவேண்டாமா. வீண் கவலை ஏன்? எல்லாம் வல்ல கடவுளிடம் சகல பொறுப்பையும்விடு, அவ

ருக்கு உன் கணவன் நிரபராதி என்பது தெரியும். அவரவர் தலை விதிப்படியே யாவும் நடக்கும் நம்மால் ஆவதென்ன இருக்கிறது.

ஸரஸா:— அண்ணு! என் கணவர் நிரபராதி என்பது இவ் வுலகில் நால்வருக்கே தெரியும். நால்வருக்குத் தெரிந்தும் ஒருவாராவது அவருக்கு உதவிசெய்ய முடியாதபடி யிருக்கிறது. அதாவது குற்றம் நடந்த அன்றிரவு என் கணவர் நம்முடனேயே இந்த பங்களாவில்தானே இருந்தார். நான் அறிவேன். நீர் அறிவீர், கடவுள் அறிவர். என் அன்பர் அறிவர். இவர்களில் யாருடைய சாக்ஷியமாவது செல்லக்கூடியதா? தவிற அன்றைய இரவு தீபாவளிப் பண்டிகையாகையால் நாம் வெகு நேரமாக இரவு 12 மணி வரையிலும் தாங்கள் எடுத்துவந்த ஜவுளிகளையும், அதன் நேர்த்தியையும்பற்றி பேசிக்கொண்டே இருந்தோம். பின்பு, நாழிகையாகி விட்டதென்று எல்லோரும் இதே ஹாலிலேயே படுத்துக்கொண்டு தானே இருந்தோம். தாங்கள் அதோ அந்த சோபாவில் படுத்திருந்தீர்கள், நான் இதே சோபாவில்தான் படுத்திருந்தேன். எனது நாதர் அந்த ஈஸிசேரில் படுத்துக்கொண்டிருக்கவில்லையா இதெல்லாம் தங்களுக்குதெரிந்ததுதானே. பிறகு விடியற்காலை $3\frac{1}{2}$ மணிக்கு தாங்கள்தானே முதலில் எழுந்து என்னை எழுப்பி சீக்கிரமாக வென்னீர் போடும்படி சொன்னீர்கள், அப்பொழுதும் என் கணவர் அதே இடத்தில்தானே படுத்துக்கொண்டிருந்தார். இது எல்லாம் தாங்கள் அறியாததன்று அப்படியிருக்க என் கணவர் 12 மணிக்கு மேல் தோட்டத்திற்கு சென்று நமது தோட்டக்காரனைக் கொலை செய்தாரென்றால் இதை யார் நம்புவது. நாம் சொல்வதை யார் நம்புவார்கள். பாழாய்ப்போகும் இந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் பழைய விரோதத்தை வைத்துக்கொண்டு இந்தக் கேசில் என் கணவனையே மாட்டிவிட்டான். அதற்குத் தகுந்தாற்போல் சாக்ஷியங்களையும் தயார் செய்துவிட்டானே. அண்ணு! தாங்கள் பெரிய பாரிஸ்டராக இருக்கிறீர்களே சாக்ஷிகளை குறுக்கு கேள்வி கேட்க முடியாமலாபோயிற்று. எத்தனையோ கேஸ்களை ஜெயித்த தாங்களே இது மிகவும் கடினமானதென்றால் நான் என் செய்வது?

சுரேந்:— தங்காய்! நீ சொல்வது சரி. நான் என் செய்வது எதற்கும் சட்டம் இடம்கொடுக்கவேண்டாமா? கேஸோ மிகவும் சாதுரியமாக ஜோடித்து வைக்கப்பட்டிருக்கிறது. சாக்ஷிகளையோ ஒரு சிறிதும் அசைக்கமுடியவில்லை. நானும் இன்று மாலை 6 மணி வரை நமது தோட்டக்காரன் மனைவியை எத்தனையோ விதமாகவும் எவ்வளவோ சாமர்த்தியமாகவும் குறுக்கு கேள்விகள் கேட்டுப்பார்த்

தும் பயனில்லை. இத்தனை சாக்ஷியங்களிலும் அவளுடையதுதான் மிகவும் முக்கியம்.ஏனெனில் மற்றவர்கள் எல்லோரும், உனது கணவனை அந்த சமயத்தில் தோட்டத்தில் கண்டதாகவும் மிகுந்த திகிலுடன் கொலை செய்தவன் மாதிரி ஓடிவந்ததாகவும் சொல்லுகிறார்கள். அவர்களுடைய சாக்ஷிபத்தையாவது எப்படியாவது தள்ளிவிடும்படி செய்யலாம். தோட்டக்காரன் மனைவியுடையது அப்படியல்ல. தானும் தன் புருஷனும் ஒரே படுக்கையில் படுத்திருந்ததாகவும் இரவு $10\frac{1}{2}$ மணிக்கு மேல் மிகவும் புழுக்கமாக இருக்கிறதென்று தாங்கள் இருவரும் குடிசைக்கு வெளியே உள்ள புற்றரையில் படுத்துக்கொண்டிருந்ததாகவும் இரவு சுமார் $12\frac{1}{2}$ மணிக்கு உனது கணவர் பக்கத்திலுள்ள செடிகளின் ஊடேயிருந்து ஒரே பாய்ச்சலாக வந்து தன் கையிலிருந்த கட்டாரியினால் தோட்டக் காரனைக் குத்தியதாகவும், நிலவு வெளிச்சத்தில் அவருடைய முகம் வெகு நன்றாகத்தெரிந்ததென்றும் அது அவர்தான் என்று தன்னால் நிச்சயமாக சொல்ல முடியுமென்றும் சொல்லுகிறாள். தவிற, தான், கத்தியினால் எங்கு தன்னையும் கொன்றுவிடுவாரோ என்ற பயத்தினால் பேசாது இருந்துவிட்டதாயும் கூறுகிறாள். இந்த ஒரு சாக்ஷியம்மட்டும் உன் கணவனை குற்றவாளி என்பதாக்கி தூக்கு மரத்திற்கும் அனுப்பிவிடக்கூடும். ஐயோ, இதுவரையிலும் உங்கள் சோற்றையேஉண்டு வளர்ந்த அவளாவது உங்களுக்கு அனுகூலமாயிருக்கக்கூடாதா? அல்லது கொலை செய்தது இன்னார் என நிச்சியமாய் கூறமுடியாது என்று சொல்லக்கூடாதா? நிலவு வெளிச்சத்தில் என் எஜமானர் முகத்தை வெகு தெளிவாகக் கண்டேன்; அது அவருடைய முகம் தான் என்பதைப்பற்றி சந்தேகமேயில்லை என்று அல்லவா சொல்லியிருக்கிறாள். தங்காய்! நமது தோட்டக்காரியின் சாக்ஷியம் மட்டும் பொய் என்று ரூபிக்கும் பக்ஷத்தில் நான் நாளையே உனது கணவனை மீட்டிவந்துவிடுவேன்'' என்று கூறினர்.

இதை யெல்லாம் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்த ஸாரஸாவின் கண்களில் ஒருவித பிரகாசம் உண்டாயிற்று. சரேலென்று தன்னிருக்கையைவிட்டு எழுந்தாள். "அண்ணு இந்தத்

தோட்டக்காரியின் சாக்ஷியத்தை பொய் என ரூபித்தால் என் கணவர் விடுதலை அடைவாரா?

சுரே:— தங்காய்! ஆக்ஷேபனை என்ன. என் குலதெய்வத்தின் மீதாணைப்படி நான் உன் கணவனை விடுவிக்கிறேன். அதைப் பொய்யென எவ்விதம் ரூபிக்கமுடியும், அது அசாத்தியமான விஷயமே. இதை முடிக்கும் வரைக்கூட அவள் காத்திருக்கவில்லை, ஓரே ஓட்டமாக ஓடினுள் தனது அலமாரியைத்திறந்தாள் டைரியை எடுத்து அவசர அவசரமாக சிலபக்கங்களைத் தள்ளினுள். தட்டென்று அண்ணு! கொலை நடந்தது எப்பொழுது? சென்ற நவம்பர்மீ 9உ திங்கள் கிழமை இரவுதானே.

சுரேந்:— ஆம் தங்காய், இரவு $12\frac{1}{2}$ மணிக்கு மேல்தான். அதைப்பற்றி உனக்கென்ன சந்தேகம்.

ஸரஸா:— ஒன்றுமில்லை. சரி. தோட்டக்காரியின் வாக்கு மூலங்களுக்கு கோர்ட்டிலிருந்து காப்பி வாங்கியிருக்கிறீர்களல்லவா. அதை யெடுத்து தயவுசெய்து ஒருவார்த்தையையும் விடாது படியுங்கள்.

சுரேந்:— "இரவு புழுக்கம் அதிகமாயிருந்தபடியால் நானும் என் கணவனும் குடிசைக்கு வெளியே உள்ள புற்றரையில் படுத்துக் கொண்டிருந்தோம். இரவு $12\frac{1}{2}$ மணி சுமாருக்கு பக்கத்திலுள்ள செடிகளினூடேயிருந்து ஒருவர் ஓடி வந்து கையிலுள்ள கட்டாரியினுல் என் புருஷனை குத்திவிட்டு ஓடிவிட்டார். நான் அப்பொழுது முழித்துக்கொண்டுதானிருந்தேன். நிலவு வெளிச்சத்தில் அந்த ஆள் என் எஜமானர்தான் என்று நிச்சயமாக தெரிந்தது. அவர்தான் என்று உண்மையாக சொல்லமுடியும். எங்கு என்னையும் கொன்று ..........................

ஸரஸா இடைமறுத்து போதும் போதும் நிறுத்துங்கள் நான் வேண்டியதும் அவ்வளவுதான் என்றுள். அவள் கண்கள் மலர்ந்தன. வதனம் சந்தோஷத்தால் ஓர் விதமான சிவந்த ரோஜா புஷ்

பத்தைப் போலாயிற்று. சுரேந்திரர் தனது தங்கையின் சந்தோஷத்தைப்பார்த்து ஆச்சரியமடைந்தவராய் தங்காய் ஸரஸா! ஏதேனும் உளவுகள் கிடைத்தனவா? நானும் சற்று தெரிந்து கொள்ளட்டுமே என்றார்.

ஸரஸா:— ஆகா! தங்களிடம் சொல்லாமல் என்ன இனி என் கணவர் குற்றவாளியல்ல!

சுரே:— ஸரஸா என்னைக் குழப்பாதே சீக்கிரம் விஷயத்தை தெரிவி, என்று ஆவலுடன் கேட்டார்.

ஸரஸா:— அண்ணா! தோட்டக்காரியின் சாக்ஷியத்தைக் கவனியுங்கள் "நிலவு வெளிச்சத்தில் (அம்முகம்) அவ்வுறுவம் என் எஜமானனுடையது என தெரிந்துகொண்டேன்." என்று கூறியிருக்கிறாள் அல்லவா.

சுரேந்;— அதற்கென்ன முட்டாளே அதுதானே பெரிய இடைஞ்சல் முக்கியமான விரோதமான சாக்ஷியம். இதற்கா இவ்வளவு சந்தோஷம்.

ஸரஸா:— இல்லையண்ணா சற்று பொறுங்கள் குற்றம் நடந்தது நவம்பர்மீ 9உ திங்கள் இரவு அல்லவா.

சுரே;— பைத்தியமே அதினாலென்ன?

ஸரஸா;— சரி நவம்பர் 9உ அன்று தீபாவளி யல்லவா?

சுரே:— ஆம்.

ஸரஸா:— தீபாவளி பண்டிகை என்றால் என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா? பெரிய பாரிஸ்டராகிய உங்களுக்கு இது ஏன் தெரியப்போகிறது. ஈஸ்டர், கிறிஸ்மஸ், பண்டிகை என்றால் அவைகளைப்பற்றி பக்கம் பக்கமாக எழுதுவீர்கள், தீபாவளி இன்னதென்றும் அது எப்பொழுது வரும் என்றும் உங்களுக்குத் தெரியாது.

சுரே:— ஏது ஸரஸா விளையாட ஆரம்பித்துவிட்டாய், தீபாவளி எப்பொழுது வந்தாலென்ன அது எப்படி நாசமாய்ப் போனாலென்ன நமக்கும் அதற்கும் கேஸுக்கும் என்ன சம்மந்தம்.

ஸரஸா:— என்ன சம்பந்தமா சொல்லுகிறேன் கேளுங்கள் தீபாவளி பண்டிகை அமாவாஸ்யையன்று சதுர்த்தியும் கூடி வரும் தினமாகும்.

சுரே:— சிரித்துக்கொண்டு நாசமாய்போகிற தீபாவளி எப்பொழுது வந்தாலென்ன?

ஸரஸா:— அப்படியா குற்றம் நடந்தது நவம்பர் 9உ இரவு அன்று தீபாவளி அதாவது அமாவாஸை தினம் அன்றிரவு 12½ மணிக்கு என் புருஷன் முகத்தை நிலவு வெளிச்சத்தில் தோட்டக்காரி கண்டாளாம் எவ்வளவு ஒழுங்கு. என்னண்ணா உங்கள் காலத்தில் அமாவாஸையன்று நிலவு அடிக்குமோ?

சுரேந்திரநாத்பானர்ஜி சடேலென்று துள்ளி எழுந்தார். எங்கே டைரியைக்கொடு. நீ சொல்வது வாஸ்தவம்தானா பார்ப்போம் என்றார். பார்த்தார் பாபு ஆநந்தக்கூத்தாடினார். ஸரஸா! நீயே பாக்கியசாலி. உன் புத்தியே புத்தி. பாழாய்ப்போகும் என் புத்தியை செருப்பாலடிக்கவேண்டும் பாரிஸ்டர் கெட்ட கேட்டிற்குப் பட்டமும்வேறு. தங்காய்! உன்னாலும் தீபாவளியாலும் தான் உன் கணவன் பிழைத்தார். இனி கவலைப்படவேண்டாம். நாளை பகல் உன் கணவருடன் விருந்து உண்ண வருகிறேன். சமையல் தயார் செய்துவை.

மறுநாட்காலை கோர்ட்டு பூரவும் பரபரப்பாயிருந்தது கிருஷ்ணகாந்தன் கேஸ் விஷயமாக ஊர் பூரவும் ஒரே பரபரப்பு கோர்ட்டில் எள்விழ இடமில்லை. எல்லோரும் இன்று கிருஷ்ணகாந்தரை கொலைக்குத் தீர்ப்பு செய்துவிடுவார்கள் என்று பேசிக்கொண்டிருந்தனர். ஜட்ஜும் ஜூரர்களும் வக்கீல்களும் அவரவர் ஆசனங்களில் அமர்ந்தனர். குற்றவாளியும கூண்டில் இருந்தான்.

முக்கியமான சாக்ஷியாகிய தோட்டக்காரன் மனைவி இருளாயி மறுபடியும் சாக்ஷியாக வரும்படி கோரப்பட்டாள். கூண்டில் வந்ததும் சுரேந்திரர் எழுந்தார். சாக்ஷியை நோக்கி கொலை செய்தது உன் எஜமானன் தான் என்று நிச்சியமாக சொல்லமுடியுமா? எதினால் சொல்லுகிறாய் என கேட்டார்.

சாக்ஷி:— அன்றய இரவு நிலவு நன்றாய் பிரகாசித்துக் கொண்டிருந்தபடியால் இவருடைய முகத்தை வெகு லேசாக அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது என்றாள். சரி கீழே இறங்கு என்று சொல்லிவிட்டு நீதிபதியைநோக்கி ஸரஸா சொல்லியபடி விளக்கினார். நீதிபதியும், ஜூரர்களும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். குற்றவாளியின் முகம் மலர்ந்தது. இருளாயி சுற்றுமுற்றும் பார்த்தாள். கையும் காலும் வெடவெட என நடுங்கியது. ஓவென்றலறி நீதிபதியை நோக்கி துரையவர்களே! உண்மையைச்சொல்லி விடுகிறேன். குற்றவாளி என் எஜமானரல்ல. இதோ பக்கத்திலிருக்கும் இன்ஸ்பெக்டரின் மைத்துனர்தான் கொலைகாரன். பழைய வஞ்சத்தை தீர்த்துக்கொள்ளவும் தன் மைத்துனனை காப்பாற்றவும் இன்ஸ்பெக்டர் தான் இவ்விதம் சொல்லச் சொன்னார். எனக்கும் இன்ஸ்பெக்டர் மைத்துனருக்கும் நெடுநாளைய பழக்கம் உண்டு. எங்களிருவருக்கும் இடைஞ்சலாக என் புருஷன் இருந்தபடியால் என் புருஷர் கொலை செய்யப்பட்டார். கொலை செய்த கத்தியை எஜமானரின் அறையிலிருந்து நான்தான் கொண்டுவந்து கொடுத்தேன் என்க்கூவி அழுதாள். கிருஷ்ணகாந்தர் விடுவிக்கப்பட்டார், மிகுந்த கரகோஷத்தினிடையே கிருஷ்ணகாந்தரும் சுரேந்திரரும் பத்ம விலாஸத்திற்கு விருந்திற்கு வந்தனர்.

காதலனைக்கண்ட காதலியின் சந்தோஷத்திற்கு அளவும் உண்டோ? பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? தனது உயிரையே காப்பாற்றிய தீபாவளிப் பண்டிகையை வருஷந்தோறும் மிகுந்த சோலாகலமாய் கிருஷ்ணகாந்தர் கொண்டாடிவருகிறார்.

---

உ

கஜபதிசிங் அல்லது

# மேனாட்டுத் துப்பறிபவன்.

K. சங்கரநாராயணன்

(448-ம் பக்கம் தொடர்ச்சி.)

நாராயணசாமிநாயுடு:— எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. யாவும் இருண்டிருக்கின்றன.

கஜபதிசிங்:— (சிரித்துக்கொண்டே) போகப்போக வெளிச்சங் காணப்படும். சாரதா! என்ன நினைக்கின்றாய்?

சாரதா:— மாமாவைப் போன்றுதான் நானும் அபிப்பிராயப்படுகின்றேன்.

கஜபதி:— ரங்கசாமி நேற்றிரவு பாதாட்சை (Shoes or Slippers) யணிந்துகொள்ளவில்லையே?

நாயுடு:— இல்லை,

கஜபதி:— மிகவும் சந்தோஷம். இனிமேல் நான் பங்களாவின் வெளிப்பாகத்தில் சோதனை செய்யச் செல்கின்றேன். ஆனால் தனிமையாய்—என்று கூறிக்கொண்டே வீதியை நோக்கிச் சென்றார்.

கஜபதிசிங் ஒருமணி நேரம் பரிசோதனை செய்துவிட்டு கூடத்திற்குள் நுழைந்தார். அவரது வருகையை யாவரும் எதிர்நோக்கிக்கொண்டிருந்தனர்.

கஜபதி:— நாயுடு அவர்களே! இனிமேல் நாங்கள் விடைபெற்றுக்கொள்ள விரும்புகின்றோம். என்றதும் வேணுவை நோக்கினார்.

Narayanan நாராயணன்.



நாயுடு:— மரகதங்கள் ! எங்கே?

கஜபதி:— என்னால் சொல்ல முடியாது.

நாயுடு;— (கரங்களைப் பிசைந்துகொண்டு) இனிமேல் மரகதங்களைத் தரிசிக்க முடியாதோ? எனது ரங்கசாமியின் கதி! ஏதாவது நம்பிக்கை இருக்கின்றதா?

கஜபதி:— எனது அபிப்பிராயத்தைமாற்ற முடியாது.

நாயுடு;— நேற்றிரவு எனது வீட்டில் நடந்த மாயமான விஷயந்தானென்ன?

கஜபதி:— நாளைக்காலை 9 மணியிலிருந்து 10–30 மணிக்குள் எனது பங்களாவிற்கு வருவீர்களானால் எனது சிற்றறிவுக்கெட்டிய விஷயங்களைக் கூறுகின்றேன். மரகதங்களைத் திரும்பப் பெறுவதற்கு எவ்வளவு தொகை கொடுப்பீர்கள்?

நாயுடு:— எனது சொத்து முழுவதையும் அளிக்கத் தயாராகவிருக்கிறேன். எப்படியாவது எனது நற்பெயருக்குப் பங்கமேற்படாமல் பாதுகாக்கவேண்டியது.

கஜபதி:— நிரம்ப சந்தோஷம். வேணு! எழுந்திரு.

மௌண்ட் ரோட்டை (Mount Road) நோக்கித் துப்பறியும் நண்பர்களிருவரும் புறப்பட்டார்கள். ஓர் ஜட்கா வண்டியை வாடகைக்கமர்த்திக்கொண்டு அவ்விருவரும் மெதுவாய்ப் பிரயாணஞ்செய்துகொண்டிருந்தனர். கஜபதியின் மனது அக்கேசிலேயே (Case) மூழ்கிக் கிடக்கிறதென்பதை அறிந்துகொண்ட வேணு அவருடன் உரையாடுவது நியாயமல்லவென்று நினைத்தான். தன் மனதில் எத்தகைய எண்ணங்கள் இருந்தபோதிலும் அவைகளை யாவரும் எளிதில் அறிந்துகொள்ளும்படி வெளிக்காட்டுதல் ஒரு துப்பறிபவனுடைய தன்மையல்லவென நினைத்த கஜபதிசிங், ராஜீய விஷயங்களைப்பற்றியும், சுகாதாரம், மாணவர்களின் யோக்யதை, வேலையில்லாத் திண்டாட்டம் முதலியவைகளைப்பற்றியும் வேணுவுடன் சம்பாஷித்தார். 30 நிமிடங்களில் அவர்கள் "ஜஸ்டிஸ்" (Justice) பங்களாவை அடைந்தனர்.

கஜபதிசிங் ஐந்தாறு ரொட்டித் துண்டுகளை சட்டைப்பையிலிட்டுக்கொண்டார். வேணு! இப்பொழுது நான் வெளியே செல்லப்போகிறேன். உன்னை அழைத்துக்கொண்டு செல்வதில் ஆட்சேபணை யொன்றுமில்லை யென்றாலும் நீ வருவது எனக்கு ஒருவிதத்திலும் உதவியளிக்காது. ஒருக்கால் இந்த விஷயத்தைக் கண்டுபிடிக்கச் சரியானபாதை வழியாய்ச் சென்றாலும் செல்வேன். இல்லாவிட்டால் வழிதவறி திண்டாடினாலும் திண்டாடுவேன். சீக்கிர திரும்பிவந்துவிடுவேன்'', என்று கூறினதும் பெரிய தடியொன்றை எடுத்துக்கொண்டு வீதியில் இறங்கினார்.

* * * *

மேலே கூறப்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்த மறுநாட் காலையில் வேணு காப்பியருந்துவதற்காகக் கூடத்தைநாடிச் சென்றான். ஆனால் கஜபதிசிங் அவனுக்கு முன்பே காப்பியருந்திக்கொண்டிருந்ததைக் கண்ணுற்றதும் வேணு திடுக்கிட்டான். ''கஜபதிசிங்!'' என்றான் வேணு.

“இப்பொழுதுதான் வந்தேன். நீ அயர்ந்து துயின்றுகொண்டிருந்தாய். எனக்குப் பசி அதிகமாயிருந்தபடியால் உன்னை எழுப்பாமல் வந்துவிட்டேன்'', என்றார் கஜபதிசிங். இருவரும் காலை ஆகாரம் எடுத்துக்கொண்டபிறகு கஜபதியின் அறையை நாடினர்.

மணி 9 அடித்தது, நாராயணசாமி நாயுடு உள்ளே நுழைந்தார். அவருடைய வதனத்தில் மறுபடியும் பயங்கரத் தோற்றம் காணப்பட்டது. மரகதங்களைப் பறிகொடுத்தபொழுது கொண்டிருந்த திகிலைக்காட்டிலும் அதிகமான திகிலும் அச்சமும் அவருடைய வதனத்தில் தாண்டவமாடின. “எக்காரணத்துக்காக ஈசன் என்னை இம்மாதிரி பரிசோதிக்கின்றானோ தெரியவில்லை! இருதினங்களுக்கு முன் நான் எவ்வளவு சந்தோஷத்துடனும், ஊக்கத்துடனும் நம்பிக்கையுடனுமிருந்தேன். இன்று எனது செல்வம், புகழ், உயிர் முதலியவை சீர்குலைந்து போயினவே! ஒன்றன்மேலொன்றாக துன்பங்கள் விரைந்துவந்து என்னை வாட்டுகின்றன. எனது புகழை இழந்தேன்; எனது ரங்கசாமியை இழந்தேன்; இன்று எனது சாரதாவையும் இழந்தேன்.'' என்று, யாவர் மனதும் கலங்கிப்போகும்படி பரிதாபமான குரலில் நாயுடு கூறினார். “சாரதாவை இழந்தீர்களா?'' என்று ஆச்சரியத்துடன் கஜபதிசிங் வினவினார். ஆனாலும் அவரது மனது கலவரப்படவில்லை.

நாராயணசாமி நாயுடு:— ஆமாம் நேற்றிரவு சாரதாவின் படுக்கையில் ஆள் படுத்திருந்ததாகத் தெரியவில்லை. அவளது அறை காலியாக இருக்கின்றது. எனது மேஜையின்மீது ஒரு கடிதம் காணப்பட்டது. அதைப்படிக்கின்றேன்:—

அன்புமிக்க மாமாவின் பொற்பாதங்களுக்கு அடியாள் தண்டனிட்டு வணங்கி இக்நிரூபத்தை வரைகிறேன். உங்களுக்கு அடியாள் வேண்டாத தொந்தரவு கொடுத்துவிட்டேன். நான் புத்தியுடனும் ஒழுங்காயும் நடந்திருந்தால் இம்மாதிரியான அபவாதம் உங்களுக்கு ஏற்பட்டிருக்காது. இவ்வெண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு உங்களுடைய வீட்டில் ஒரு நிமிடங்கூட வசிக்க முடியாது. ஆகையால் உங்களிடம் கடைசித்தடவையாக விடைபெற்றுக்கொள்கிறேன். எனது பிற்கால வாழ்வைப்பற்றி நீங்கள் கவலை கொள்ளவேண்டாம். என்னை நீங்கள் தேடியலையவும் வேண்டாம். தேடினாலும் என்னைக் கண்டுபிடிக்க முடியாது. அது எனக்குக் கெடுதியையும் உண்டாக்கும். இவ்வுலகிலும், அவ்வுலகிலும் உங்களை ஒருபொழுதும் மறக்கமாட்டேன். இப்படிக்கு, சாரதா." இதனால் உங்களுக்கு என்ன விளங்குகின்றது? தற்கொலை செய்து கொள்ள அவள் தீர்மானித்து எங்கேயாவது சென்றிருக்கின்றாளா?

கஜபதிசிங்:— இதுதான் முக்கியமான விஷயம். நாயுடு அவர்களே! உங்களுடைய மனக்கவலை கூடிய சீக்கிரம்ஒழிந்துவிடும்.

நாயுடு:— (உற்சாகத்துடன்) நீங்கள் உண்மையைக் கண்டுபிடித்துவிட்டீர்கள். கஜபதிசிங்! மாகதங்கள் எங்கே? பார்ப்போம்.

கஜபதி;— ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்குத் தயங்கமாட்டீர்களே?

நாயுடு:— ஒவ்வொன்றுக்கும் மூவாயிரம் ரூபாய் கொடுக்கின்றேன். மாகதங்களைக்காட்டும்.

கஜபதி:— வீண்வார்த்தை வேண்டாம். மொத்தம் மூவாயிரம் ரூபாய் போதுமானது, உங்களுடைய செக்புஸ்தகத்தை எடுங்கள் (Cheque Book) பாங்குக்கு எழுதிக்கொடுங்கள். என்றதும் நாராயணசாமி நாயுடு 3000 ரூபாய்க்கு செக்கு (Chque) எழுதிக் கொடுத்தார். கஜபதிசிங் மேஜையண்டை சென்றார், ஓர் சிறுபெட்டியை எடுத்தார். அதைத் திறந்தார், உள்ளிருந்து ஓர் காகிதப்பொட்டலத்தைப் பிரித்தார் மேஜையின்மீது மூன்று பொருளை வைத்தார். நாராயணசாமிநாயுடு அலறினர். அவருடைய வதனம் திடீரென்று மலர்ந்தது. சந்தோஷத்தின் ஆர்ப்பாடத்தால் கூக்குரலிட்டார்.

தொடரும்.

# கான வித்யா ப்ரகாசினி.

## 1-ம் வருடத்திய விஷய அட்டவணை.



| விஷயங்கள். | பக்கங்கள். |
|---|---|
| நமது பத்திரிகை. | 1 |
| மானிடஜன்மத்தின் உயர்வு | 3 |
| பெண்களின் முன்னேற்றம் | 6 |
| பருத் அச்சா (ஹாஸ்யம்) | 21, 397, |
| வைத்தியம் | 24, 99, 160, 203 |
| ஸங்கீதமும், பக்தியும் | 27 |
| அனார்கலி (சிறுகதை) | 33 |
| பாலைக்கலி | 36 |
| சந்திரப்ரபா (நாவல்) | 37,89,127,209,257 |
| ஜாதக ப்ரகாசிகை | 45,93,162,205,249, 297.349,393,439,489, 537 |
| நாதசுகம் (பாட்டு) | 49 |
| கவிதையஞ்சோலை | 50 |
| சிரிப்பின் சிறப்பு | 52 |
| சரஸ்வதி | 53 |
| சொற்பிதிர் | 56 |
| தியாகராஜய்யரவர்கள் சரித்திரம் | 57, 110, 171 |
| கிருட்டினன் சூதுச்சருக்கம் | 61 |
| ஆசிரியர் குறிப்பு | 67 |
| இந்து சங்கீதம் (சாஸ்திரம்) | 69,135,181,232,281, 327,370,428,476,521 |
| இராக சஞ்சாரம் | 72,142,189,237,286, 329,369,426,468,519 |
| கீர்த்தனை | 13,74,145,190,238, 287,331,374,431,470, 525 |
| கதர் விற்பனை (பாட்டு) | 79 |

| விஷயங்கள். | பக்கங்கள். |
|---|---|
| இராஜகோபாலன் | 81, 97, 114, 200 |
| அழிவறுமான்மா | 85 |
| ன்றிஉணர்தற்குறிய உண்மைகள் | 101 |
| னநாயகக்கல்வி | 102 |
| ாஞ்ச ஜன்யம் | 105 |
| இலட்சுமிகடாட்சம் | 122 |
| எழுத்து பந்தனப்போட்டி | 125 |
| மதிப்புரை | 126, 248, |
| கல்யாணியின் அதிர்ஷ்டம் | 149 |
| பரமன்பால் பற்றியகாதல் | 155 |
| இந்தியப் பெண்களின் நிலை (பாட்டு) | 157 |
| ஆத்மசுதந்திரம் (பாட்டு) | 165 |
| மனிதனிற் கடவுள் | 167,214,263, 307,358 |
| சுகாதாரக்கும்மி (பாட்டு) | 175 |
| சந்தோஷத்தின் சரித்திரம் | 177 |
| மாயாஉலகத்து அதிசயங்கள் | 193 |
| அறவழி | 211 |
| பறவையின் சிந்தனை (பாட்டு) | 213 |
| அம்புஜம் | 218 |
| திருவருளும், தொழில்முறையும் | 224 |
| குமரகுருபரரும், தமிழ் நாடும் | 228 |
| சோமுவின் முடிவு | 243 |
| பெரியாழ்வார் பிரபந்தம் | 253,277,345,389,435, 477, 529 |
| ஒற்றுமையின் உயிர்நிலை (பாட்டு) | 261 |
| பங்குனி உத்திரம் | 269 |
| சிறுவர் உலகம் | 276, 296, 360 |
| வேலைகிடையாத் திண்டாட்டம் (பாட்டு) | 292 |
| இராஜபுத்திரர் சிறப்பு | 293 |
| கஜபதிசிங் (நாவல்) | 301,337,381,443,493, 541 |
| சந்திரன் (பாட்டு) | 305 |
| மேவாரின் மேன்மை | 315 |
| மாதர் மனநிலை | 317 |

| விஷயங்கள். | பக்கங்கள். |
| --- | --- |
| முரண்பாடு | 321, 414 |
| கடிகாரம் (பாட்டு) | 325 |
| பெண்களின் உரிமை (பாட்டு) | 353 |
| கடவுள் உண்மை | 355 |
| உயர்ந்தோர் உள்ளம் | 361 |
| ஜகத்குரு நவீனானந்த சுவாமிகள் | 364 |
| நமது சமய உலகம் | 379 |
| கண்ணம்மா என்குழந்தை | 401 |
| உத்தம ரஹஸ்யம் | 405 |
| பிச்சைக்காரன் | 410 |
| கண்ணன் குழலோசை | 422 |
| திருக்குற்றாலம் | 449 |
| ராதாகிருஷ்ண or உண்மைக்கடவுள் | 452 |
| பாம்பாட்டி | 459 |
| ஒழுக்கம் | 462 |
| புலிக்கூடு (பாட்டு) | 465 |
| சாசாவின் சமர்த்து | 481 |
| இசை இன்பம் | 497 |
| கர்மயோகம் | 501 |
| அன்பு | 505 |
| சிறுவனும் படகோட்டியும் | 510 |
| நேயர்களுக்கு | 515 |
| அறிவிப்பு, | 516 |
| கவிதையும் வீரச்சுவையும் | 533 |

# எமது பிரசுரங்கள்.

ஸங்கீதானுபவ ஸார ஸங்கிரஹம் முதற் பாகம் ஆரம்ப அப்பியாசிகளுக்கு மிக்க உபயோகமானது ரூ 1—8—0

ஷை ஷை 2-ம்பாகம் ,, தாளவிவரங்களுடன் கூடியது 2-12—0

இரண்டு பாகங்களும் சேர்ந்தது ,, 4—0—0

[ஞா]ன வித்யா ப்ரகாசினி விலை ரூ 2—0—0

(பழய வால்யம்) இராகவிஷயமாக இதுவரையில் இம்மாதிரி புஸ்தகம் தெளிவாக யாவராலும் வெளியிடப்படவில்லை என்பது யாவரும் அறிவார்கள். வீணை, ஹார்மோனியம், பிடில், முதலியவாத்தியங்களில் பிறர் உதவியன்னியில் தானுகவே இராகங்கள், கற்பனுஸ்வரங்கள் வாசிக்க கற்றுக்கொள்ள உதவும் புஸ்தகம் இதுதான்.

கீர்த்தன பாவ ப்ரகாசிகை விலை ரூ 1—0—0

இதில் கீர்த்தனைகளுக்கு தமிழிலேயே பதவுரை, பொழிப்புரையுடனும் கீர்த்தனங்கள் ஒவ்வொன்றையும் பூராவும் தெலுங்கு, தமிழ் இவைகளில் தனித்தனி ஒழுங்குபடுத்தி சிறந்த பாஷா ஞானமுடைய வித்வான்களின் உதவியைக்கொண்டு இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது தவிறவும் இந்நூலில் ஸ்ரீத்யாகராஜய்யர் அவர்களின் ஜீவிய சரித்திரமும் சேர்த்து எழுதப்பட்டிருக்கிறது.

நாதவித்யா மர்மம் விலை ரூ 0—8—0

ஹார்மோனியத்தில் எவ்வாறு கமகத்துடன் கேட்போர்க்கு இனிமைபயிர்க்குமாறு வாசிப்பது இதன் விவரத்தைத்தான் இந்நூலில் ஸ்வராவளி, ஜெண்டைவரிசை, அலங்காரம், கீர்த்தனைகள் இவைகளை உதாரணமாக காட்டி கிரந்த கர்த்தாவின் சுமார் 20 வருஷ அனுபவ ஞானத்தைக்கொண்டு யாவரும் எளிதில் உணரும் வண்ணம் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது.

ஜாதக ப்ரகாசிகை விலை ரூ 1—4—0

ஜோதிடத்தில் சிறிதும் பழக்கமில்லாத ஒவ்வொருவரும் எளிதாக சுதாவில் கற்றுக்கொண்டு பலன்கள் பார்க்க உதவும் புஸ்தகம்,

"ஸ்ரீஆண்டாள் வைபவம்" விலை அணு 3.

ஸ்ரீ ஆண்டாளின் சரித்திரத்தை மிக்க எளியநடையில் எழுதியுள்ளது.

எம்மிடம் ஆர்மோனியம், சுருதிப்பெட்டிகள், தஞ்சாவூர் வீணைகள், பிடில், புல்லாங்குழல் முதலிய வாத்தியங்களும் கிடைக்கும்.

"ஸங்கீத நிலையம்" ஸ்ரீவைகுண்டம்.